# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 212/2017 | Village | : | |
| Prosecution witness | : | PW- 8 | Taluk | : | ஒரத்தநாடு |
| Name | : | திரு. விஜயபாஸ்கர் | Occupation | : | VAO |
| Father Name | : | திரு.செல்வராஜன் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 13.08.2025**

Both accused present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது ஒரத்தநாட்டில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். சம்பவ சமயத்தில் 2017 இல் நாஞ்சிகோட்டை கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் தொடர்பான குற்ற வழக்கில் போலிஸார் என்னை சாட்சியாக அழைத்தார்கள். நானும் எனது கிராம நிர்வாக உதவியாளரும் அண்ணாநகர் பிரிவுக்கு 31.5.2017 அன்று அழைத்தார்கள் அங்கு போனோம். தெற்கு காவல்நிலைய போலிஸார் வாகன தனிக்கை செய்து கொண்டு இருந்தார்கள் செல்லும் வாகனங்களை தனிக்கை செய்தார்கள் அப்போது எதிரிகள் TN 49 B 0606 பஜாஜ் CD 100 என்ற வாகனத்தில் வந்தார்கள். எதிரிகளை மறித்து விசாரித்தார்கள். 10 நாளைக்கு முன்பாக நடந்த ரமேஷ் கொலை தொடர்பாக வாக்குமூலம் கொடுத்தார்கள். பணம் தொடர்பாக ரமேஷை கொலை செய்ததாக சொன்னார்கள். மதியம் 2மணிக்கு மேல் ரெனால்டு, அதன்பிறகு நவநீதகிருஷ்ணன் இரண்டு பேரையும் விசாரித்தார்கள். அவர்களிடமிருந்து vivo போன், ரூ10,000 பணம் மற்றும் பைக்கை கைபற்றினார்கள் அங்கிருந்து பாத்திமா நகருக்கு அழைத்துபோனார்கள். வியாகுலமாதாகோவில் தெருவில் உள்ள ரெனால்டு வீட்டிற்கு போலிஸார் வாகனத்தில் அவரை அழைத்து வந்தார்கள் நாங்கள் இருசக்கர வாகனத்தில் போனோம். அங்கு கத்தி, இரும்பு ராடு மற்றும் ஒரு பை பணம் 78,000த்துடன்

கைபற்றினார்கள். மேலும் அங்கிருந்து டிரைஸ் கைபற்றினார்கள் அது கொலை செய்தவர்களில் ஒருவர் போட்டிருந்ததாக சொன்னார்கள். மகசர் போட்டு கையெழுத்து வாங்கினார்கள். அந்த பொருட்களை பார்த்தால் தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது 2வது கையெழுத்து என் உதவியாளருடையது அதில் எதிரி ரெனால்டும் கையெழுத்து போட்டுள்ளார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது 2வது கையெழுத்து என் உதவியாளருடையது அதில் எதிரி நவநீத கிருஷ்ணன் கையெழுத்து போட்டுள்ளார். என் கையெழுத்துக்கள் முறையே **அ.சா.ஆ.5, 6** ஆகும். என்னிடம் காட்டப்படும் 31.5.2017 மாலை 5.45மணிக்கு செல்போனும், பணமும் கைபற்றபட்ட கைபற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது 2வது கையெழுத்து என் உதவியாளருடையது. 31.5.2017 மாலை 5.15 மணிக்கு மோட்டார் சைக்கிளும் போனும் கைபற்றிய கைபற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது 2வது கையெழுத்து என் உதவியாளருடையது. 31.5.2017 மாலை 6 மணிக்கு பேக், பணம் ரூ 79,000, இரும்புராடு, சட்டை, தங்ககாயின், பத்தாயிரம் மதிப்புள்ள City Union Bank காசோலை ஒன்று  கைபற்றிய கைபற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது 2வது கையெழுத்து என் உதவியாளருடையது. 31.5.2017 மாலை 6.30 மணிக்கு இரத்தகறை படிந்த வேட்டி ஒன்று, ஒரு வால் கைபற்றிய கைபற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது 2வது கையெழுத்து என் உதவியாளருடையது. அது நவநீதகிருஷ்ணனிடமிருந்து கைபற்றபட்டது. மேற்படி என் கையெழுத்துக்கள் முறையே **அ.சா.ஆ.7,8, 9, 10** ஆகும். சா.பொ.1ஆக குறியாகியுள்ள அந்த பைதான் கைபற்றபட்டது. என்னிடம் காண்பிக்கபடும் இரும்புராடு கைபற்றபட்டது அது **சா.பொ 5** ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வால்தான் அன்று கைபற்றபட்டது அது **சா.பொ 6** ஆகும்.  வேட்டி சட்டை கைபற்றினார்கள் இதுதான் என்று ஞாபகமில்லை. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் புகைபடம்போல்தான் அந்த டாலர் இருந்தது. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் City Union Bank காசோலைதான் அன்று கைபற்றியது அது அ.சா.ஆ.2 ஆக குறியாகியுள்ளது. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் இரண்டு vivo செல்போன்கள் அன்று கைபற்றபட்டது அது **சா.பொ.7, 8** ஆகும். என்னை போலிஸார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் போன் தகவல் வந்தவுடன் வாகன தனிக்கை செய்யும் இடத்திற்கு போனேன் என்றால் ஆமாம். போன் செய்து வாகன தனிக்கை செய்ய கூப்பிட்டார்களா என்றால் ஆமாம். எத்தனை மணிக்கு தகவல் வந்தது என்றால் 1 1/2 மணிஇருக்கும். என் அலுவலகத்திற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீ இருக்கும் என்றால் 11/2 கி.மீ இருக்கும். 31.5.2017 அன்று working day என்றால் ஆமாம். என் மேலஅதிகாரியிடம் வேலை நாள் அன்று மேற்படி வாகன தனிக்கைக்கு எழுத்து பூர்வமாக உத்தரவு பெற்று சென்றேனா என்றால் இல்லை போனில் தகவல் சொல்லிவிட்டு போனேன். VAO ஆபிஸில் பின்பற்றி வரும் நகர்வு பதிவேட்டில் குறித்து வைத்துள்ளேனா என்றால் நடைமுறையில் இல்லை. எழுதி வைக்கவும் இல்லை. வாகன தனிக்கையில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் 1மணிநேரம் இருக்கும். 1மணிநேரத்தில் போலிஸார் இருசக்கர, நான்கு சக்கர வாகனங்களை நிறுத்தி சோதனை செய்தார்கள் என்றால் ஆமாம். சோதனை செய்தது யாகப்பாநகர், அண்ணாநகர் முக்கம் என்றால் ஆமாம். அது போக்குவரத்து அதிகம் உள்ள இடம் என்றால் ஆமாம், இரண்டு பக்கம் கடைகள் உள்ளது என்றால் ஆமாம். போலிஸார் விசாரிக்கும்போது எத்தனைமணிக்கு தகவல் வந்தது எத்தனை மணிக்கு நான்போனேன் என்று தகவல் சொல்லவில்லை என்றால் ஆமாம். வாகன தனிக்கைக்கு போனதாக வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். முக்கத்தில் வீட்டில் கைபற்றிய பொருட்கள் பட்டியலில் எதிரிகளிடம் கையெழுத்து வாங்கினாகள் என்றால் ஆமாம்.1வது எதிரியின் வீடு உள்ள பாத்திமாநகருக்கும், சோதனை செய்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 1 கி.மீ இருக்கும் 1வது எதிரியின் வீடு எந்த திசையில் உள்ளது என்றால் வடக்கு தெற்கு சாலையில் உள்ளது. அவருடைய வீடு எந்த பக்கம் பார்த்துள்ளது என்றால் ஞாபகமில்லை. அது மாடிவீடா, மச்சு வீடா என்றால் மாடிவீடுதான். மேலஅதிகாரிக்கு தகவல் கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், எதிரி வீடு மாடிவிடு என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கைபற்றபட்ட ஆயுதங்களில் இரத்தகறை இருந்தது என்றால் ஞாபகமில்லை. அவை எல்லாம் வீட்டிற்குள் இருந்து கைபற்றினார்களா வெளியில் வைத்து கைபற்றினார்களா என்றால் வெளியில் வைத்து கைபற்றினார்கள். கைபற்றுதல் மகசரில் எதிரிகள் கையெழுத்து இல்லை என்றால் ஆமாம். ஒப்புதல்

வாக்குமூலம் , மகசர் எல்லாம் கணினியில் தட்டச்சு செய்யபட்டுள்ளது என்றால் ஆமாம். தெற்கு காவல்நிலையத்தில் print எடுத்து கையெழுத்து போட்டோம் என்றால் இரண்டு ஆவணங்களில் அவ்வாறு போட்டோம். அந்த இரண்டு ஆவணங்கள் எது என்றால் ஞாபகமில்லை. கணினியில் தட்டச்சு செய்தது யார் என்று தெரியுமா என்றால் அதை Laptopஇல் வைத்து ஒரு போலிஸார் டைப் அடித்தார். கைபற்றபட்ட ஆயுதங்களில் இரத்தகரை உள்ளதாக மகசரில் இல்லை என்றால் ஞாபகமில்லை. எத்தனை ஆண்டுகளாக பணி செய்கிறேன் என்றால் பல ஆண்டுகள். சுமார் பத்து வழக்குகளில் இதுபோல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இரண்டு, மூன்று இருக்கும். ஆய்வாளர் விசாரிக்கும்போது 31.5.2016 அன்று தகவல் வந்ததாக ஆய்வாளரிடம் சொன்னேனா என்றால் இல்லை. எனக்கு முன்பு எந்த எதிரியும் கைது செய்யவில்லை என்றும், எந்த பொருளும் கைபற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கருப்பு பேக் மார்க்கெட்டில் கிடைக்ககூடியது என்றால் ஆமாம். கைபற்றுதல் மகசரில் 31.5.2017 அன்று 5.45, 6.30 மணிக்கு கைபற்றிய மகசரில் வியாகுலமாதாகோவில் தெரு, எதிரி வீட்டிலிருந்து கைபற்றியதாக குறிப்பு இல்லை என்றால் ஆமாம். வழக்கில் அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யபட்டு அதில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் இல்லை இரண்டுதான் போட்டேன். வழக்கில் போலிஸாருக்கு நான் கையிருப்பு சாட்சியாக செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது போலிஸார் சொல்லிகொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.